



ஓலை 100| ஓசை 223| டிசம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அன்பின் வழிய துயிர்நிலை அ∴திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு**

## பொருள்

**அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும். அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பே ஆகும்**

**அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய**
**9597887847**

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## எழுசீர் மண்டிலம்;
## ஆறு மா; ஒரு காய்

## கீழோ ராயினும் தாழ உரை!

மண்ணில் கீழே மழையும் விழுந்தால்
    மழையைக் கீழாய் இகழவாமோ?
கண்ணின் துளியும் கரைந்தே விழுந்தால்
    கடிந்தே உரைத்தல் கீழ்மையன்றோ!
பெண்ணைக் கீழாய் மதித்தே இகழ்ந்து
    பெரிதும் தாழ்த்தி உரைப்பதுவோ?
மண்ணி லுயிர்கள் தாழ்ந்த போதும்
    மாண்பால் தாழ்த்தி உரைக்காதே!

வண்ண மிழந்தால் வான வில்லை
    வகையாய்த் தாழ்த்தி உரைப்பதுவோ?
எண்ண(ம்) உயர்ந்தும் ஏழ்மை வதைத்தால்
    இழிவா(ய்) எவரும் பழிப்பதுவோ?
மண்ணி லுறையும் ஊரு ணியாக
    மாண்பில் உறைவோர் தாழ்ந்தவரோ?
எண்ணிப் பதுக்கும் பணமு மிருந்தால்
    எளியர் தம்மை தாழ்த்துவதோ?

துயரக் கடலில் துடித்தே கிடக்கும்
    அயரா துழைப்போர் தாழ்ந்தவரோ?
இயலா நிலையர் உணர்வைக் கொன்று
    எள்ளி நகைத்தே இகழ்வதுவோ?
முயன்றே உழைக்கார் குறுக்கு வழியில்
    முன்னே வந்தோர் உயர்ந்தவரோ?
அயரா திவையை ஆய்ந்தே கீழோ
    ராயினும் தாழ்த்தி உரைக்காதீர்!

வருவாய் வேண்டி வளைந்தே உழைத்தும்
    வாழ்வில் உயர்வை அறியாதார்
பொருளா தாரம் தன்னில் தாழ்ந்தோர்
    அருளைப் பெறாதார் ஆவாரோ?
இருளை வாழ்வில் போர்த்தி உயிர்த்தால்
    இழிந்தோர் என்றே இகழாமல்
பெருத்த மனத்தால் பொறுமைப் போற்றி
    பெரிதாய் உரைப்போர் பெரியோரே!







**இலக்கணக் குறிப்பு:**

மண்டிலப் பாக்களில் எழுசீர் மண்டிலமும் ஒன்று. இதில் பல்வேறு வாய்பாடு இருப்பினும், மேலே உள்ள பாடல் ஈரசைக் கொண்ட ஆறு மா. ஒரு காய் கொண்டதாகும். நான்கு மா ஒரு வரியாகவும், இரண்டு மா. ஒரு காய் அடுத்த வரியாகவும் மடக்கி உள்ளேதள்ளி எழுதவேண்டும். நான்கடிகளுக்கும் ஒரெதுகை பெற்று வரும். ஒவ்வோர் அடியிலும் முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமையும். எட்டு வரிகள் கொண்டது ஒரு பாட்டாகும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## கீழோ ராயினும் தாழ உரை!

அகர முதல குழுமம் நீயோ
அமுத தமிழுக் காற்றும் தொண்டோ
தொகையாய் விரிந்தே தொடுதே வானம்
தொய்வே இல்லா தூய பணியால்
அகமும் இங்கே அழகாய் நிறைந்தே
அறமாய் தமிழை ஆரத் தழுவி
இகத்தில் வளர்க்கும் இனிய தமிழை
எங்கும் எவர்க்கும் ஏற்றம் வழங்கி

வாரம் தோறும் வண்ண வடிவில்
வடிக்கும் சிற்பி வாழ்க வாழ்க
ஆரம் போலே அள்ளி கோர்த்தே
அளிக்கும் இதழின் அறமும் வாழ்க
வீரம் பொங்கும் விடியல் எழுத்தின்
விருட்சம் காக்கும் விழுதே வாழ்க
காரம் குறையா கடமை ஆற்றும்
கவிஞர் நடையில் கலையும் வாழ்க

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

### 1. இன்னிசைவெண்பா.

ஆற்றல் பெருக்கி அறிவை நிறைத்திட
ஏற்றத்தைப் பெற்றிட என்றும் விரும்பியே
மாற்றத்தை நீயும் மனதில் இருத்தியே
ஆற்றலை ஏறாய் அணுகு.

### 2. நேரிசை சிந்தியல் வெண்பா.

வன்முறை தன்னை விறைப்பாய் அகற்றியே
அன்பை மனதிலே ஆழ்த்தியே-இன்னுரை
தன்னைப் பகர்தல் தலை.

### 3. குறள் வெண்பா.

அகத்தில் துணிவுடன் அச்சம் விடுத்தே
இகலுடை ஏறுபோல் ஏகு.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

சேர்ந்து சுற்றும்
நம்மை
ஊரார் பார்த்தால்
பரவாயில்லை.
இரவுக்கு மட்டும்
தெரியாமல்
பார்த்துக்கொள்வோம்.
விடியும் வரை
மென்று தீர்த்து விடும்
இருவரையும்.
/
விறகினை
அடுக்கி விட்டாய்
எண்ணெய்யும்
ஊற்றி விட்டாய்.
எதற்கு தாமதம்?
நெருப்பு வை
எரிந்து சாம்பலாகிறேன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# என் பயணத்தை யோசிக்க வேலை

சிரித்துப் பேசி மயக்க தெரியவில்லை
சிரிக்க பேசி சிந்திக்க வைத்திருக்கிறேன்.

அழுது பேசி சாதிக்க முடியவில்லை
ஆனால் அழுகை எனக்கு
அடுத்த இலக்கை அடைய வைத்தது.

பொய்களைச் சொல்லி
நான் ஏமாற்றியதும் இல்லை
பொய்யான வார்த்தைகளை பயன்படுத்தி
பலப்படுத்தி இருக்கிறேன் பலரை.

உண்மை சொல்ல
நான் தயங்கவில்லை
அதனால் பல தாக்கல்கள்
என்மேல் ஏற்பட்டுள்ளது

கோபத்தால் மட்டுமே
என் உணர்வை
காண்பித்திருக்கிறேன்

அக்கறையும் நிமித்தமாகமாக
அது புரியாதவர்கள்
நான் என்றும் பிழைதான்
என்று முத்திரை குத்தியிருக்கிறார்கள்

அதை நான் திரும்பிப் பார்க்க மறுத்து
என்னுடைய முன்னேற்றத்தில்
கவனம் செலுத்தி

இன்று மனநல ஆலோசகராக
பல தொழில் முனைவோர்களை
உருவாக்கி கொண்டிருக்கிறேன்
நன்றி இறைவா!

இறைவன் அன்பு மட்டுமே
உண்மையானது என்று புரிந்து
அந்த அன்பை
என்னுடன் இருப்பவர்களுக்கு காண்பித்து
இம்மட்டும் என்னுடைய பயணத்தை
மகிழ்ச்சியாக பயணித்து கொண்டிருக்கிறேன்.

நன்றி இறைவா



கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், சென்னை

# பேதைமை

## அதிகாரம் : 84




கேடுபயப்பன கைகொண்டும்
ஆக்கம்பயப்பன கைவிட்டும்.
புத்திகெட்டத்தனமாய் நடத்தலே
பேதைமை எனப்படுமாம்.

தன்னொழுக்கத்திற் பொருந்தாத
தரங்கெட்ட செயல்களில்.
விருப்பங்கொள்தலே பேதைமைகளில்
மாபெரும் பேதைமையாம்.

தகாதவைக்கு நாணாது
தக்கவை நாடாது.
கண்ணோட்டமில்லாது
நல்லவைப்பேணாததுமே
பேதைமைத் தொழிலாம்.

பனுவலோதி உணர்ந்தும்
பிறர்க்கதை எடுத்துரைத்தும்.
ஒழுக்கநெறியி லடங்காத
பேதையரிலும் பேதையரெவருமில.

எழுபிறப்பும் அழுந்தத்தக்க
நரகத்துன்பமதை பேதையொருவன்.
இப்பிறவியிலேயே செய்துகொள்ள
வல்லவனாய் இருக்கின்றான்.

செய்நெறியறியா பேதை
செயலொன்றை மேற்கொள்ள.
அதுபொய்த்து அவனும்
கைவிலங்கடையும் நிலைபெறுவான்.

முன்வினைப்பயனால் பெருஞ்செல்வம்
அடைந்திடினும் பேதையின்.
அயலார் நன்மைபெற
சுற்றத்தாரையோ பசிவருத்தும்.

ஒருபொருளை உடைமையாய்
பெற்றதும் பேதைக்கு.
பித்துபிடித்தவன் கள்குடித்து
மயங்கினார் போன்றதாம்.

பேதையின்பிரிவு எவர்க்கும்
துன்பந் தராதெனினும்.
பேதையரின் நட்பும்
இனிமை பயக்காதாம்.

சான்றோரவையில் பேதைபுகல்
தூய்மையற்ற பாதத்தை.
கழுவாது அப்படியே
படுக்கையில் வைப்பதுபோலாகும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சீவகசிந்தாமணி (ஐந்து)

தன்னைச் சுற்றி பகைவர்கள் உணர்ந்தான்
இன்னமும் கால தாமதம் வேண்டாம்
அன்பான விசயை உடன் சந்தித்தான்
"துன்பத்தின சூழலில் இருக்கிறேன் புரிந்துகொள்"

"உடனே மயில்பொறியில் தனியே புறப்படு
தடைகள் வரும் இங்கிருந்து தப்பிவிடு
கடமை மறவாதே சிசுவைக் காப்பாற்று
முடங்கி விடாதே தைரியமே பெண்மை"

"என்னைப் பற்றி கவலைகள் வேண்டாம்
முன்னரே தெரியவில்லை நண்பனைப் பற்றி"
தன் அருகனின் பஞ்ச நமஸ்கார மந்திரம்
"ஓம்ணமோ அரஹந்தாணம்" கூறினான்

துணைவியை மயில்பொறியில் அமர்த்தினான்
அணை உடைந்ததுபோல் கண்ணீர் சிந்தினான்
துணை இல்லா தவனை வீரர்கள் சூழ்ந்தனர்
பணையென சரிந்து நிலத்தில் விழுந்தான்

கணவன் மறைவுக்கு நாடே அழுதது
துணைவனுக்கு நேர்ந்த கதி மயங்கினாள்
கணநேரம் மறந்தாள் பறக்கும் ஊர்தியை
திணறிய பொறி கீழே இறங்கியது

கண் மை அழித்தாள் விசயை
வெண்ணிற ஆடை உடுத்தினாள் அவள்
உண்ணா நோன்பு, வளையல்கள் கழற்றினாள்
மண்ணில் கால் சிலம்பை வீசினாள்

நிலை குலைந்த வான ஊர்தி
களை இழந்து கீழே இறங்கியது
அலை பாய்ந்தது ,காற்றில் ஆடியது
சிலையென உணர்வற்று இருந்தாள்



மயில்பொறி வாகன ஊர்தி மற்றொரு
மயிலை ஏந்தி சுடுகாட்டில் இறங்கியது
வயிற்றுச் சுமையின் வலி அழுதாள்
துயிலிழந்து பெற்று எடுத்தாள் மகனை

அருமை மகனின் எதிர்காலம்
இருள் காற்று மழை கலங்கினாள்
அருள் தரும் தெய்வம் தோன்றியது
உருமாறி னாள் தோழி சண்பகமாலை.

"தனித்து அடைந்த துன்பம் போதும்
பனிபோல் விலகும் நடப்பதை கவனி
இனி எல்லாம் நலமே நடக்கும்
இருந்து கவனிப்போம்" என்றாள் தோழி

தொடரும் ...

கவிஞர் ந. திருக்காழு

# கிராமிய கீதம்

## வெள்ளந்திச் சிரிப்பு — வெடலப்புள்ள மெதப்பு



கடைக்கண்ணால் பார்த்தவளே
காந்தமாய் ஈர்த்தவளே

மனசும் தொலைந்ததடி
உன்னிடம் தஞ்சமடி

இதயமும் துடிக்குதடி
மீனாட்டம் துள்ளுதடி

தாளாமத் தவிக்கையிலே
தழுவிடத்தான் தோணுதடி

கோவம் கொள்ளாதே
கோவைப்பழ ஒதட்டழகியே

கொஞ்சிப் பேசடி
குறையேதும் இல்லையடி

ஒதட்டுச் சுழிப்பிலே
உள்ளமும் மருகுதடி

முத்தமொண்ணு தந்துப்புட்டா
ஆசையும் கூடுமடி

வெள்ளந்திச் சிரிப்புக்காரி
மாமனோட சொந்தக்காரி

வெடலப்புள்ள நீதானே
வெக்கமும் வந்திருச்சா

ஒறவுக்காரன் நானிருக்கேன்
மாலையிடக் காத்திருக்கேன்

அத்தமக ரத்தினமே
அழகான புள்ளிமானே

துள்ளிக் குதிச்சித்தான்
நெஞ்சத்தான் அள்ளுறியே

நல்லநாளும் வருகுதடி
பரிசமும் போடுறேன்டி

குஞ்சலமும் ஆடுதடி
கும்மாளம் போடுதடி

அலங்காரம் பண்ணிக்கிட்டு
மணப்பெண்ணா வாயேன்டி

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நெஞ்சப்பிணி

காசேதான் கதியென்று
காசினியில் வாழ்வோரே

போசிக்கும் யாரொருவர் என்
பசியைத்தான் விரட்டிடுவார்?

காத்திருக்கும் யாசகி நான்
கதராடை இராணியும் யான்

நாதியற்று வீதியிலே
நார் போலே கிடக்கின்றேன்

பேதையின் காலக் குறியீடு
பிச்சை எடுக்கும் பாத்திரமாய்

பசிப்பிணி போக்கிட வந்தாலும்
நெஞ்சப்பிணி ஒருநாளும் போகாது!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# சிந்தனை செய் மனமே

அவளின்றி ஓரணுவும் இல்லை அவனியிலே
அவளாலே பவனி வருகிறாய் தரணியிலே
ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வோம்
அடிமைத் தனத்தைத் தகர்த்துத் தள்ளுவோம்
பெண்மையை என்றும் உயர்வாய் உள்ளுவோம்
மண்ணிலே பிறந்தவள் விண்ணிலும் பறப்பவள்
வேலைக்குச் சென்றால் கூலியும் பாதி
சேலைகளுக்கு இங்கே கிடைப்பதில்லை நீதி
மங்கையே புறப்படு கண்ணகி போலே
சின வேங்கையாய் சீறிப் பாய்ந்திடு
வன்கொடுமை செய்வோரைத் தீயிட்டுக் கொளுத்து
மெல்லியளே உனக்காய் கிழக்கும் வெளுக்கும்
யுகம்தோறும் பிறக்க வேண்டும் பாரதி
பெண் விடுதலைத் தேரின் சாரதி
வந்தனம் சொல்லி வணங்குவோம் பெண்மையை
சந்தனம் கொடுத்து வாழ்த்துவோம் உண்மையாய்.



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# தன்னிகரில்லா முகவரி

தமிழீழத் தாகம் தீர்க்க தமிழ்ப்படை
எழுப்பி தமிழினப் பகை வென்று
தமிழாட்சி தந்து தமிழீழம் அமைத்தான்
தெவ்வர் செருக்கு வீழ்த்தி திக்கெங்கும்
தமிழீழக்கொடி பறக்கவிட்ட தென்னவன்
தமிழ் எல்லை காத்த காவற்திறவோன்
தமிழினத்தின் தன்னிகரில்லா முகவரி.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# நிரம்பி வழியும் பாசாங்குகள்

வீட்டின் மீது நிரம்பி வழியும்
நிலா வெளிச்சம்!
பகலைப் போல பாசாங்கு காட்டும்
இயற்கையின் விளையாட்டு!
ஓலைக்குடிசையின் ஓட்டையில்
நுழைந்து வரும் வெள்ளிக்காசு
நிழலோடு விளையாடும் ஆட்டம்!
காதலிலே கட்டுண்ட பாவனையில்
அன்பைப் பொழியும் காதலியின்
பாசாங்கில் மூழ்கித் திளைக்கும்
பாவனையில் காதலன்!
கூச்சலிடும் வயிற்றுப் பசிக்கு
சட்டி நிறைய நீர்சோறு
பிள்ளைகளுக்குப் பரிமாறும் அம்மா!
உனக்கு இருக்கிறதா என்ற கேள்விக்கு
நீ சாப்பிட்டால் நான் சாப்பிட்டது போல்
என்று பாசங்காய் பதில் சொல்லும்
பாசம் நிறைந்த அம்மா!
இருப்பதை இல்லாததாய்
இல்லாததை இருப்பதாய் எண்ணி
வாழ்க்கையை நடத்தும் பாசாங்கில்
ஏமாற்றத்தை விழுங்கும் மனது!
மகிழ்ச்சியின் உச்சத்தில் நிரம்பி வழியும்
பாசாங்கில் மனித வாழ்வு!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# மேல கோபுரத்து யானை

மீனாள் கோயில்;
மேல் கோபுர உள் வாசல்;
சோடியாய் இரு யானைகள்.
கல் யானைகள்; அழகு; பயமின்றி
வாண்டுகள் ஏறி விளையாட;
சற்றே உயரம் மட்டமாய்;.
இடதும் வலது மாய்;
தும்பிக்கையற்ற, இடறலுடன்,
இடது யானை சற்று வாட்டமாய்,
என்றாவது கல் தும்பிக்கை
மீண்டும் முளைக்கும்; என்ற நப்பாசையில்;
மீனாள் அருள் உண்டா?
அறியாமல் அது, ஆடுகிறது.
நம்பிக்கையுடனும், நம்பிக்கை இல்லாமலும்.
ஊசலாட்டம் போட,
நம்பிக்கை தானே வாழ்வு
வலது யானை சொல்ல;
இன்னும் ஆடுகிறது இடது யானை;
தலையாட்டலுடன்.
ஆமோதிக்கிறதோ?



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

உலகம் எங்கும் உருண்டோடுகிறது ஊழல்
உருவமில்லாமல் உருவம் கொடுத்து உயிரைப் பறித்து
உடன்பட்ட மனிதன் தன்னை மறந்த நொடி
பலரை கருவறுக்கும் அந் நொடி அமைதி எங்கே
ஏற்றிலும் சேற்றிலும் ஒவ்வாமை பட்டதே ஊழல் உடன்பாடு
நீ யார் நான் யார் போட்டி போட்டு ஊழல் உடன்பாடு
உருவம் தவிர்த்து கர்வம் அதிகரித்து அகிலம் கண்டு
நிறை இல்லாமல் நிம்மதி இல்லாமல் ஏழைகள் கூடு
எங்கெங்கே எண்ணங்கள் ஆயிரம்
மனிதா அரசியலே அறமாக்கி விட்டாயே
அடிமைப்படுத்தி ஊழல் செலுத்து உன் வரலாறு காண
கண்கள் உண்டு ஆயிரம் விதமாக கவனம் வேண்டும்
ஒரு நாள் மாறும்.



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# அப்பா

தாய்மையின் நிழலில் மறைவாய்
நிற்கும் நிஜமானவர் அப்பா

குடும்பத்தின் உயிர் எழுத்து
மற்றவர் பார்வையில் ஆயுத எழுத்தாய்
அப்பா

ஆசையே இல்லாத அன்பின்
அடையாளம் அப்பா

வியர்வை துளிகளை ஆடையாய்
கொண்ட கிழிசலின் முகவரி அப்பா

கோபத்தின் முகமூடியில் தாய்மையின்
இன்னொரு அவதாரம் அப்பா

இறுதி வரை வில்லனாய் விலகி
நிற்கும் கதாநாயகனாய் அப்பா

குடை காம்பில் பூக்கும்
வாசமில்லா மலராய் அப்பா
மரணம் வரை



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தூக்கம் கொன்ற கைபேசி

விளையாட்டாகத் தான்
விளையாட்டு தொடக்கமோ.

தூக்கம் தொலைந்ததே
தூரமான ஊடகங்களில்.

பணமும் தொலைந்ததே.
பயணமும் பயங்களோடே.

தயக்கங்களோடு
விடியலின் எதிர்கொள்ளல்
எத்தனைநாட்களோ?



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# தாத்தாவின் கைக்கடிகாரம்

அவரைப் போலவே
சுறுசுறுப்பாய் எழுந்து அலாரம் அடிக்கும்.

நொடி முள்ளை போலவே அவரின் வேகமும்
அதிகாலை ஐந்து மணிக்கே
கடைக்கு முதல் ஆளாய் சென்றிடுவார்.

அப்போதுதான் பாலே சூடாகிக் கொண்டு இருக்கும்.
முதல் ஆளாய் முதல் டீ யை
தூக்கு வாளியில் வாங்கி வந்திடுவார்.

கையில் வரிக்கி ரொட்டியும் (ரஸ்க்)
பையில் செய்யது பீடியும் இல்லாத நாட்களே இல்லை.

சேமிப்பு என்பது துளியும் இல்லை.
சேமித்த சொத்துகளாய் இரு பெண்பிள்ளைகள் மட்டும்தான்.

இருப்பதை வைத்து வாழ்ந்திட கற்றுக் கொடுத்தவர்.

அவரின் குரல் கேட்டால் போதும்
எங்கிருந்தாலும் ஓடி வரும் எனது கால்கள்.
ஒரு கன்றுக் குட்டியைப் போல.

அந்த அதட்டலும் அந்த அரவணைப்பும்
ததும்பி வழியும் தண்ணீர் குடத்தைப் போல பெற்றவன் நான்.

எப்போதும் வேகமெடுக்கும் கால்களுக்கு
இறுதியில் வலியும் வேதனையும்தான் மிச்சமாய் கிடைத்தது.

இப்போதும் ஓடிக் கொண்டே இருக்கிறது.
அவரின் கைக்கடிகாரம் மட்டும்.




கவிஞர் கு. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, சாப்டூர் (மதுரை)

# திருமணம் ஆகவில்லை

அன்று
திருமணம் ஆகவில்லை
வரதட்சணை இல்லை
கையில் பணம் இல்லை

இன்று
திருமணம் ஆகவில்லை
வரன் பார்க்க நேரமில்லை
பார்த்த வரன் பிடிக்கவில்லை
முகத்தில் அழகு இல்லை
மகிழுந்து இல்லை அதனால்
மகிழ்ச்சி இல்லை

எதிர்பார்ப்புகள் நிறையவில்லை
ஆசைகள் நிறைவேறவில்லை
காதல் கிடைக்கவில்லை
கிடைத்த காதல்
கையில் கிட்டவில்லை
பெண்ணுக்கு மாப்பிள்ளை இல்லை
மாப்பிள்ளைக்கு
பெண் பொருத்தம் இல்லை
அதிகம் படிக்கவில்லை

படித்த வேலைக்கு செல்லவில்லை
சமையல் தெரியவில்லை
சமைத்தால் பிடிக்கவில்லை
ஆக மொத்தம்
திருமணத்தில் விருப்பமே இல்லை



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# சிந்தனை சிதையும்போது



சிந்தனை சிதையும்போது
சினமே சீற்றம் கொள்ளும்.
சிரத்தில் ஏற்றி சிரத்தை எடுத்தாலும்
சிக்கலில்தான் முடியும்

பேசும் மொழிகளெல்லாம்
புரியாத புதிராய்.
புதுமைகள் பேசும்
சித்திரக் கணங்களாய்

கருத்தாயும் கருத்துக்கள்
இதயத்தை எட்டாமலே.
முயன்று முட்டி
மோதிக் கொள்ளும்

என்னதான் நடக்கிறது
எதைத்தான் என செய்வதறியாது.
பித்துப் பிடித்து
அலைந்ததான பொழுதாகிப்போகும்

விரும்பாமலே விலங்கிடப்பபட்ட
விசித்திரமான பொழுதுகளாய்.
விம்மியழ நேரமில்லாத
நிம்மதிதொலைத்த
நினைவுகளில்

அலைமோதும் அத்தனையும்
இதயத்தை இடித்துவிட்டு.
ஒருநிமிடமேனும் நின்றுவிட்டே
நிலைமாறிச் செல்கிறது


சுற்றும் தலைக்குள்
கற்களை நிரப்பி.
பாறாங்கல் அடுக்கும்
பாரமான பாரதூரங்கள்

பழையதும் புதியதும்
போட்டி போட்டு.
பதுங்குகுழி தேடுகிறது
என்மெல்லிய மனதுக்குள்ளே

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# துன்பத்தில் இன்பம்

துயிலும் நேரம் கூட
மனதின் நிறைவை
காரணம் காட்டும்
எத்தனையோ பேர்
வாய் உளறல்
கனவில் மூழ்கல்
பாடலில் வாயசைத்தல்
பயந்து திடுக்கிடல்
தூக்கம் வரவில்லையென
தனிமையில் யோசித்தால்
யாதும் துன்பத்தில் இன்பம்
காணா மனோநிலைகளே.
மனித மதியின் மறதியில்லை என்றால்
யாதும் நிர்வகிக்க நிலை வராது.
துன்பத்தில் இன்பம் காணும்
உள்ளம் உன்னில் நீயாக இரு.



கவிஞர் வியாத்தீதன் சீ. லக்ஷீஹரன்

# வலிகளின் வலிமை

மண்ணில் முளைக்கும்
விதையின் முதலிழை

மேகங்களின் மோதலில்
பிறக்கும் கனமழை

பெற்ற தாயின்
அழகிய கைக்குழந்தை

வளர்த்த தந்தையின்
ஆனந்தக் கண்ணீர்

உறவுகளுக்காக எப்போதும்
வெல்லும் தோல்வி

உறவற்ற அனாதைகளின்
முதல் வெற்றி

வெள்ளைத் தாளின்
கருப்பு எழுத்துகள்

ஆரியத் தணலிலும்
தழைத்தோங்கும் தமிழ்

அழிக்கும் மனிதனை
அரவணைக்கும் இயற்கை



துயரங்களிலும் கைவிடாத
ஆழ்மன அமைதி

இயலாத முதுமையின்
கடைசிப் புன்னகை

நம்பிக்(கை)யின் ஒப்பனை
வலியின் வலி(மை)

முடியாமல் முடிகிறது
வலிகளின் வலிமை.

வலிகளின் விளிம்பில்

கவிஞர் வியாத்தீதன் சீ. லக்ஷ்ஹரன்

# வேடிக்கை

கருணையை பிடுங்கிக் கொண்டு
கவனத்தில் வைத்து விடாமல்
கணக்கற்று நகரும் வேக யுகத்தில்
நிதானத்தை உடைத்து விட்டு
நிம்மதியைத் தேடும் யாத்திரையின்
குரூர நகர்வில்
பரிதவிப்பை புறம் தள்ளி
பரிவுகளும் பச்சாதாபங்களும்
புதைகுழிக்குள் விழுந்து கிடக்கும்
அவசர ஓட்டத்தில்
நீளும் கரத்தை ரணமாக்கி
நாளும் பொழுதும் நம்மை இம்சித்து
தட்டி விடும் விசாரணையில்
அன்பின் அழுகையை நிராகரித்து
அடுத்தடுத்த காரியங்களில்
நமை நுழைக்கும்
பணி இலக்குகளில்
உனக்கென்ன வந்ததென்றும் உதவியினால்
ஒன்றும் மாறப்போவதில்லை என்றும்
ஓயாது அலறும் குடும்ப நச்சரிப்பில்
வேறென்ன செய்வது
வேடிக்கை பார்ப்பதும்
வாய்ப்பு கிடைத்தால்
சுயமிகள் எடுத்தும்
விலகிப்போவதைத் தவிர
எதிரே நடக்கும் விபத்தின் தருணத்தில்.



கவிஞர் இளையவன் சிவா

# ஊழல்

மருந்தும் இல்லை மருத்துவரும் இல்லை
ஆனால் நாடு முழுவதும் மருத்துவனை இருக்கிறது
ஊழல் என்ற பெயரில்

இல்லாதவன் எடுத்தால் திருட்டு
இருப்பவன் எடுத்தால் லஞ்சம்
அதிகராத்தில் இருப்பவன் எடுத்தால் ஊழல்...

ஊழல் செய்தவன் ஒளிந்து கொள்கிறான்
சட்டத்தின் ஓட்டை வழியாக
பசிக்கு எடுத்தவன் தொங்குகிறான்
தூக்கின் வழியாக.

இலவசம் என்ற பெயரில் ஆரம்பித்த
இந்த ஊழல் இன்று அனைத்து துறைகளிலும்
ஆலமரமாய் பல விழுதுகளுடன்
அசைக்க முடியாமல் நிற்கிறது.

உண்மையைக் கொன்றே உலா
வருகிறது ஊழல்
காரியம் தாமதம் ஆக ஊழல்.
அது அந்நிய நாட்டில்.
காரியம் நடக்கவே ஊழல்.
அதுவே இந்திய நாட்டில்.

என்று மாறுமோ இந்த ஊழல்
இளைஞனே முன்னின்று வா
முழு மூச்சோடு முயற்சி செய்
திசையெட்டும் ஊழல் ஒழியட்டும்
நாடு வளம் பெறட்டும்



கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

# அயலாரைப் பேணிடு

அன்னை தந்தையோடு
உறவுகளாய் பயணித்தவர்கள்
அவர் பெயர் சொல்லி
நம்மை மறவாதோர் அயலாரே
உடன் பிறப்புகளோடு
உடன் பிறவா உறவுகளாய்த்
தொடர்ந்தோர் நம் அயலாரே

நம் குழந்தைகள் கூட
நம்மை விட்டும் தூரமாகலாம்
அவசரத்தில் கைகோர்க்க
அயலார் துணை வேண்டும்
அண்ணல் மொழிந்ததும்
அயலார் உறவைப் பேணுவதில்
அழகிய உதாரணமாகும்

சமைத்த உணவைக் கூட
அயலாரோடு பகிர்ந்துண்ணல்
செயல்களில் அழகென்றார் .
அடுத்த வீட்டில் அடுப்பெரியாது
நான் பசியாறலை வெறுத்தார்
அயலாரோடு ஒன்றி வாழாதோர்
பணமிருந்தாலும் ஏழையே.



கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# நானும்கூட ஒரு அனாதைதான்

ஒரு அனாதையின் வலி
இன்னொரு அனாதைக்கு மட்டுமே தெரியும்
இருந்தும் இல்லாமல் இருப்பதும் அனாதைதான்
இல்லாமல் இருப்பதை இருப்பதாய்
நினைப்பதும் அனாதைதான்
அந்த அனாதையும் அனாதையாய் நின்றது
ஏன் நானும் கூட ஒரு அனாதைதான் என்பதாலா?



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# மூலதனம்



அன்புக்கு உறவுகள் என்றும் மூலதனம்
பெற்றோருக்கு பாசமான குழந்தைகள் மூலதனம்
ஆசிரியருக்கு கற்பிக்கும் மாணவன் மூலதனம்
பணத்துக்கு செலவு செய்வது மூலதனம்
உப்புக்கு வற்றாத கடல்நீர் மூலதனம்
இயற்கை அழகுக்கு மரங்கள் மூலதனம்
அலைபேசி செயல்பட இணையத்தளம் மூலதனம்
கவிஞர்கள் எழுத எழுதுகோல் மூலதனம்
முதியவர்களுக்கு உதவியாய் ஊன்றுகோல் மூலதனம்
எண்ணும் எழுத்துக்கு சிந்தனைகள் மூலதனம்
பறவைகள் பறக்க இறக்கைகள் மூலதனம்
விலங்குகள் வாழ காடுகள் மூலதனம்
காதலன் காதலிக்கு முத்தம் மூலதனம்
வண்டுக்கு செடியிலுள்ள தேன் மூலதனம்
உயிர் மூச்சுக்கு சுவாசமே மூலதனம்
மூலதனம் இல்லாமல் ஒன்றும் இயங்காது.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நடிகையின் புகைப்படம்

தாபத்தை தணிக்க
பயன்படுகிறது
பிரபல நடிகையின்
புகைப்படம்.

எடை குறைத்து
இடை குறைத்து
உடை குறைத்த
பாவைகள் இணையத்தில்
விலையேறுகின்றன.

அந்த இருட்டில்,
முத்தத்தில் தொடங்கி,
முழுதும் முடிந்த பின்,
முகத்தைப் பார்த்தேன்,
ஐயையோ அவள்(ன்) அலி.

உள்ளாடை இன்றிய
ஆடையில் அவளும்
உற்றுப் பார்த்தபடி
நானும்
இடையில் ஊசல் ஆடுகிறது
ஓர் உணர்வு.



அடுத்தவன்
மனைவி மீது
ஆசை வருவதேன்.
அவள் மீதுள்ள
மோகத்தினாலா?.
இல்லை
அவளின் தேகத்தினாலா?.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)


# பயணம் செய்ய ஆவல்

ஓடும் பேருந்தில்
சன்னல் ஓரத்தில் இருந்து
ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தாயே
உன் விழி பேரழகில்
என்னை உருக வைத்தாயே
உறக்கத்தை கெடுத்தாயே
பேருந்து பயணத்தில் பார்த்தாய்
உன் பெயருடன் என் பெயரைச் சேர்த்து
பயணம் செய்ய விழைகிறேன்
என்விழியில் வேர் ஊன்றியவளே.



கவிஞர் முனைவர் க குமார், சித்தாலிக்குப்பம்

# காதல் ஓசைகள்



உன்னை முத்தாடும்
ஆசையை தடுப்பதற்குள்
உன் முகத்தின் ஒளித்தீ
ஓசையின்றி தீண்டிவிடுகிறது

சொற்கள் சமையாமலே
இதோ எத்தனை பொழுதுகள்
கடந்துவிட்டன

காற்றும் சற்றே பெருமூச்சை
வெளியேற்றி கடக்கிறது
மலராத பூக்கள் மௌனமாய்
பார்த்து வைக்குது

முகங்காணாமல்
அவளைத் தேடும் உணர்வுக்கு
பதில் தேடுகிறேன்
சற்றே தித்திப்பு கூடுதலாய்
இதழில்

கொலுசின் சத்தம் என்னை
கடந்து போகுது
ஆனாலும் பார்க்க நினைக்கவில்லை
என் வீட்டையும் கடந்துவிட்டன
அவளின் பாதங்கள்

மனம் பேசிக்கொள்வது
அழகுதான்
என் வீட்டு பூஜையறைக்கு
அவள் வரும் நாள் என்றோ

காத்திருப்பில் வலியில்லை
கூடுதல் புன்னகை குமிழுது

சந்திக்கும் நாளுக்காக
நானும் விழிதிறந்து வழிப்பார்த்த
நிலையில் எப்போதும்
உந்தன் வரவை கண்டிடவே
கண்களும் ஏக்கத்தில்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# வாழ்வே பொன்னாகும்

மழை வெள்ளம் புயல் என
நடுங்க வைக்கும் வானிலை
மழை பொழிவு என்றாலே
விவசாயிக்கு கொண்டாட்டம்

ஆனாலும்
காலத்தில் மழை பொழிந்தா
விவசாயம் மேம்படும்
காலம் தவறி மழை பொழிந்து
விளைச்சல் எல்லாம் வெள்ளத்தில்.

காலமெல்லாம் சேற்றிலே *உழைச்சி களைச்சி*
மகசூலை வீட்டில் சேர்க்க
விவசாயி படும்பாடுதான் சொல்லி ஆறாது.

பாரதி சொன்னது போல்
*தறிபடுமோ தாளம்படுமோ*
நம் விவசாயிகள் படும்பாடுதான்.

மாளிகை வீட்டு பிள்ளைக்கு
புயல் மழை எல்லாம் வேடிக்கை.

குடிசையில் வாழும் ஏழை குழந்தைக்கு
நனைவதும் காய்வதும் வாடிக்கை..!

இயற்கையை நேசித்த
நம் முன்னோர்கள் வழி நடந்தால் காலத்தே
மழை பொழியும் *வாழ்வே பொன்னாகும்*



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# குறுங்கவிதை



அறியாத பருவத்தில்
தனிமைச் சூழலில்
அன்பின் நிமித்தமாக
தன்னை விட
எளிய உயிர்களுக்கு உதவி
தானும் மகிழ்தலே
அறத்தின் உச்சம்

கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# பிரிவு

பார்க்கும் தூரத்தில்
இருந்தாலும்
பாராத நிலையில்
நீயும் நானும்
பார்க்க நினைக்கும்
என் இதயமும்
பார்க்க வேண்டாம் என்று
சொல்லும் இந்த பிரிவும்
பிரியத்திற்கு காரணம்
யாராயிருந்தாலும்
பிரிவு ஒன்றே.

பிரிந்து பிறகும்
நினைக்கும் உறவுகளுக்கு
இருந்த ஞாபகம் மட்டுமே
சேரும் ஞாபகம் இல்லை
எனில் நீ கொடுத்த பாடமே
வாழ்க்கையில் சிறந்தபாடம்
என வாழ்க்கையை
இனிதாக தொடங்குகின்றோம்
இந்த பிரிவுடன்.



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

# சுந்தரியும் சேர்ந்தாளே

## தேனிக் காத்தோட தெம்மாங்கு நாம்பாட

தென்மேற்கு பருவக்காத்து
தேகமதை தழுவியோட
அன்னக்கிளியவளும் வரப்போரம்
அன்னநடை போட
தன்னாலே எம்மனசு
தடுமாறி நின்றாட
கன்னக்குழி அழகிலதான்
நானிங்கு திண்டாட

படபடக்கும் பேச்சிலதான்
மாமான்னு கொண்டாட
தடதடன்னு ஓடும்போது
கொலுசும் சத்தம்போட
மளமளன்னு நானோடி
பிடிக்கையில உதறியோட
கலகலன்னு சிரிப்பிலதான்
என்னை மறந்தாட

தேனிக் காத்தோட
தெம்மாங்கு நாம்பாட
கன்னியவளும் எசப்பாட்டு
கணக்காத் தான்பாட
காய்க்காத மரமும்
காய்த்து குலையாட
வாய்க்கா வரப்பெல்லாம்
பசுமைப் பூத்தாட



பட்டான பட்டவளும்
பரவசமா பாத்தாளே
சிட்டான சிட்டவளும்
சந்தோசம் தந்தாளே
கட்டான கட்டழகு
கண்ணாளா என்றாளே
சுட்டியான சுட்டியழகி
சுந்தரியும் சேர்ந்தாளே

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

ஆண்டாள் 031 | நாச்சியார் 11வது திருமொழி

## (தாமுகக்கும்) 6முதல் 10முடிய 005

ஆறாவது பாசுரத்தே பயிர்வளம்பெற காவிரிநீர்
பாயரங்கம் நாயகிசேர் அரங்கனவன் தாழ்ந்தோர்க்கு
மாவெளியன் உயர்ந்தோர்க்கு எட்டாதான் நால்வேத
அர்த்தமவன் பெரியபெருமாள் கைப்பொருளெலாம் கொண்டிட்டோன்
தேகத்தைக் கொண்டனனே! மாலவனை சாற்றிட்டாள்
ஆண்டாளே! ஏழாவது பாசுரத்தே ஏழ்மதில்சூழ்
கோயிலதில் சயனிப்போன் அரங்கனவன் ராமனாக
சீதைதன் பிரிவதனில் ஊணுறக்கம் சற்றுமிலா
வருத்தத்தன் கடலணையை கட்டுங்கால் எளிமையினான்!
மறந்ததனை தன்பெருமை நினைந்துரைப்பதாய் சாற்றுகின்றாள்
ஆண்டாளே! எட்டாவது பாசுரத்தே பாசிபடர்
பூதேவி தனைமீட்க பேரழுக்குத் திருமேனி
வராகமதாய் நீரொழுக வெட்கமின்றி அரங்கனவன்
முன்சொன்ன பேச்செல்லாம் அழித்திடவே முயன்றாலும்
நிலைத்திருக்கும் நேர்த்திதனை சாற்றுகின்றாள் ஆண்டாளே!
ஒன்பதாவது பாசுரத்தே ருக்மிணியை சிசுபாலன்
மணமுடிக்க இருந்தநிலை நிகழாதே வான்நோக்கி
வீழ்ந்தநிலை உற்றபோது அரங்கத்தான் மணமுடித்து
துணைநின்றான்! நிர்கதியாம் பெண்டிருக்கு ரட்சகனவன்
ஆனானே! ரட்சிப்பான் என்றனையும் என்கின்ற
நம்பிக்கை சாற்றுகிறாள் கோதாதான்!வாரானாய்
சேரானாய் துன்புறுத்தும் அன்னவனை எதிர்பார்த்தாள்!
பத்தாவது பாசுரத்தே முன்பொருகால் நேர்மையான்
அரங்கனவன் அருளிட்ட சத்தியத்தை சரமச்சுலோ
கச்சொல்தனை பெரியாழ்வார் ஏற்றமைந்தார்! "தம்மீது
விருப்பமுற்றார் தம்மையெலாம் தாமுகப்பர்!"என்றவுரை
கோதையிடம் பொய்த்திடுமோ? யாரவரை செயல்படுத்த
கூடுமென எண்ணிடுவள்! பதினொன்று முற்றிற்று!
பனிரெண்டு "மற்றிருந்தீர் கட்"கென்று பத்தமையும்!
கோதைதமிழ் சுவைத்தின்பம் மாந்துவமே! வாழ்கமாதே!




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# கடிதம் எழுதினேன்



கடிதம் எழுதினேன்
கவலை போக்க எழுதினேன்
கண்ணீர் சொரிய எழுதினேன்
கவனம் ஈர்க்க எழுதினேன்

காதல் பெருக எழுதினேன்
காயம் மறைய எழுதினேன்
காவல் இருக்க எழுதினேன்
காவியம் படைக்க எழுதினேன்

மனதை உருக்க எழுதினேன்
மனதால் சேர்க்க எழுதினேன்
மயக்கம் தீர்க்க எழுதினேன்
மன்னிக்க கேட்க எழுதினேன்

உன்னை சேர எழுதினேன்
உனக்காய் வாழ எழுதினேன்
உண்மை உரைக்க எழுதினேன்
உணர்வாய் கலங்க எழுதினேன்

பந்தம் தொடர எழுதினேன்
பந்தல் காண எழுதினேன்
பரிசம் போட எழுதினேன்
பதில் கடிதம் வேண்டி எழுதினேன்.

கவிஞர் பி. லூட்ஷன், முல்லைத்தீவு (இலங்கை)

விறகுகளால்
நிரம்பியிருப்பதால்
காடுகள்
அதிகம்
எரிகின்றன

வானத்தில்
பறந்தாலும்
சிறகுகளின்
நிதானமே
திசைகளின்
வழிகாட்டி

கற்பனைகளற்ற
அத்தனை
எழுத்துக்களும்
கவிதையாகின்றன
ஒரு
எதார்த்த காகிதத்தில்

துலாக்கோலின்
சரிசமம் என்பது
பிடித்திருக்கும்
கைகளில்
தொக்கி நிற்கிறது



சாம்பல்களில்
சிறகுலர்த்தும்
பறவைகளின்
எச்சத்தில்
விதைகளின்
அழுகுரல்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# கலைச்சொல்

காலத்தின் கொடுமையாய்
கங்குலியில் நுழைந்து
அழுக்காறு எண்ணத்தால்
அகிலத்தில் படர்ந்து

தாம்தம் நசையை
நசங்காமல் அடைய
மடியை துறந்தாயே
முந்நீரையாய் சூழ்ந்தாயே

முழுமக்களாய் மதியிழந்து
கூற்றமாய் மாறினாயே
கேளிர் நெஞ்சத்தில்
வேள்வியை வளர்த்தாயே

வைகலும் கடந்தாலும்
வையகத்தில் வழியில்லையே
அனுதினம் இடும்பைக்கு
இடும்பையை புகுத்திட

அச்சத்தை தவித்தாயே
ரௌத்திரத்தை கொடுத்தாயே
வகையாய் சூடியே
மாட்சிமையாய் அடைந்தாயே

கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

# அன்பு

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"
அன்பை விதை அளவிலா ஆனந்தத்தை அறுவடை செய்வாய்!
இன்முகம் காட்டு இதயத்திலே இடம் பிடிப்பாய்!
ஈட்டிய பொருளை தானம் செய் ஈன்றவள் மனம் குளிர்வாள்
உலகம் என்றும் உன் கையிலே
ஊரும் தான் உன்னை புகழுமே!
எண்ணமே நல்லவையாக இருந்தால் ,
ஏற்றமே தந்தணை இவ்வுலகம் மகிழ்விக்குமே!
ஐயத்தை விட்டொழி!
ஒப்பற்ற வாழ்வு சேருமே!
ஓதும் செயலே செவ்வனே செய்!
ஔவையின்ஆத்திச்சூடி அனைத்தையும் நல்குமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# அப்பாவின் கல்வெட்டு

அன்பை மறைத்து வைத்தே
அருகில் அமர்ந்து அகம் மகிழ்ந்தாய்.

ஆலம் விழுதென இருந்தாய்
அனைவரையும் தாங்கி பிடித்தாய்.

இரும்பென தேகத்தில் உந்தன்
இளகிய இதயம் அதில் குறையாத பாசம்.

ஈர விழிகளை மறைத்தாய்
ஈகை குணத்தில் உயர்ந்து நின்றாய்.


உள்ளங்கையில் உயரத்தூக்கி
உலகத்தை காட்டினாய்.

ஊர் போற்றும் உத்தமனாக வளர
ஊன்றுகோலாய் இருந்தாய்.

எண்ணங்களில், எழுச்சிகளில்
எழில்மிகு தூணாக நின்றாய்.

ஏணியில் ஏற்றி விட்டு
ஏக்கத்துடன் காத்திருந்தாய்.

ஐவரையும் அரவணைத்து தாங்கியே
ஐயமின்றி வாழ வழிவகுத்தாய்.



ஒற்றுமையை கடைப்பிடித்தாய்
உற்றத்தோழனாக உடன் இருந்தாய்.

ஓயாமல் உழைத்தே ஓடாய்போனாலும்
ஓடிவந்து உதவிட துடித்தாய்.

ஔவியம் பேசாது கடந்தாய்
ஔடதமாய் திகழ்ந்தாய்.

அஃதே அப்பாவின் தியாகங்கள்
அனைத்தும் அழியாத கல்வெட்டுகள்.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# பனுவல்

பனுவல் தேடி புதைய
விழி அயறும் தருணம்
விழும் மழை சாரல்
புத்துணர்வூட்டிட.

ஏதோ ராகம் மெல்லிசையாய்
மென் தேகம் படர
சிலிர்க்கும் மெய்யின்
ஓரமான மனதோடு

ஏதோ சிந்தனையும்
எங்கோ சென்ற நினைவும்
அழகான தருணத்தில் மூழ்கிட
பூங்காற்றும் புலனத்தின்
குறுஞ்செய்தியும் நினைவூட்ட.

மீண்டும் தொடர்கின்றவோ
வரிகளும் வாசமும்
புத்தகத்தின் இடையே



கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# இறையிடம் கேட்பேனே

உகந்த துணையானீர்களே
உங்களால் பலவும் கற்றேனே
உசிதமாக பாசமும் பெற்றேனே
உசாத்துணையாக பலவும் தந்தீரே

உசுப்பேற்றியதில் நிறைய மாறினேனே
உடனடியான வலிக்கு மருந்தாக ஆனீரே
உதாரணமாக உங்கள் வழி நடந்தேனே
உதவிகளும் பிறருக்கு பல செய்தேனே

உத்தரவிற்கு கீழ் படிந்தேனே
உத்தரவாதமும் சில நேரங்களில் பெற்றேனே
உந்துதலும் முன்னேற்றத்திற்கு உரியதே
உபகாரத்தில் உயர்ந்தீரே

உபசாரத்தில் அன்பு தாயாய் ஆனீரே
உமையவளாய் ஆதரித்தீரே
உயர்வுக்கு ஏணிப்படியாய் ஆனீர்களே
உரிமையாக ஐயங்களுக்கும் தெளிவுகொடுத்தீரே

உருவம் காணாவிடினும்
உள்ளத்தில் அம்சமாக பதிந்தீரே
உவகையாக பல சொல்லிச்செல்லலாமே
உழைப்பே உன்னதமென

உள்ளது உள்ளபடி எடுத்து சொன்னீரே
உற்ற ஆசானாய் அச்சமும் துரத்தினீரே
உறவிலே அண்ணயாய் ஆனீர்களே
உன்னத அன்பும் தொலைந்தாலே

உடைந்திடுமே இதயமும் உங்கள் வாலுவுக்குமே
உயிர் உள்ள வரை உங்கள் அன்புமே
உறுதியாக கிடைத்திட
உண்மையாக இறையிடம் கேட்பேனே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# போதும் இந்த மௌனம்

மௌனமாகவே கடந்து செல்கிறாள்
எதிர்கொள்ளும் போதெல்லாம்.
வார்த்தைகளுக்கு வழியில்லை
வாழ்க்கைக்கு நான் வழி.
சமாதானம் சொல்கிறது
நிதானத்தில் என் மனம்.
நின்று கேட்க முடியவில்லை.
நிஜமும் நிழலும்.
காத்திருக்கேன் கண்மணியே.
கடைக்கண் திறவாய்
ஒருசொல் மொழிவாய்
என் பின்னால் வருவேனென்று
ஒருதலைக் காதலில்
உருகும் மெழுகாய்.
அழுகிறேன் மனத்திடே.
ஆறுதல் தர வருவாய்
மூடிய மனக்கதவைத்திற;
கனவு வரட்டும்.
கனவிலாவது நான் வருகிறேன்
சொல்விடு உன் காதலை.



கவிஞர் நுதல் விழி, இராணிப்பேட்டை

# ஆம்

வாழ்க்கையின் ஒரு பகுதி
யுத்த களம் -ஆம்
மற்றொரு பகுதி
இன்பக் களம் -ஆம்

இருவரின் உரையாடல்
இடைவிடாமல் தொடருது -ஆம்


கொட்டும் மழையிலும்
குடையின்றி நனையுது -ஆம்

இதைத் தவிர்க்க முடியாது
இளமையின் வேகம் -ஆம்

தொலைந்து போன
கால் சங்கிலி ஒன்று
சத்தம் எழுப்பியது
சருகுகளை கூட்டும்போது -ஆம்

வார்த்தைகளை லெறிந்துவிட்டேன்
திருப்பவும் முடியாது
திருத்தவும் முடியாது
அக்கணமே முடிந்தது -ஆம்

காதலரின் உரையாடலில்
அதிகம் பேசப்படும் மொழி -ஆம்
ஆம் என்றால் சரிதான்
என்று அவள் சொல்ல
இவன் ஆம் என்று முடித்து விட்டான்.




கவிஞர் தே. செ. பிரகாஷ், செஞ்சி

அன்புக்கு தமிழின் இலக்கணமாகி
ஆதரவாய் தலை கோதுவதில் அன்னையாகி

இன்பமதைத் தந்திடுவதில் தமக்கையாகி
ஈடில்லா மகிழ்வை தந்திடுவதில் தோழியாகி

உன்னதமான உறவாய் உயிரில் கலந்து
ஊடுருவிய உயிராய் உடலெங்கும் கலந்து

எண்ணிய எண்ணமதில் நேர்மை கொண்டு
ஏற்றமிகு வாழ்வை அனைவரும் பெற ஏங்கி

ஐயன் வள்ளுவனின் குறள் வழி நடந்து
ஒற்றுமையில் நிதமும் பூத்த புன்னகையுடன்

ஓதுதலை பிறருக்காய் மனமுவந்து செய்து
ஔசிதமாய் அனைவருக்கும் ஆதரவாய் நின்று

எஃகு போல் உறுதி கொண்டிட்ட எனதன்பு அக்காவிற்கு
இனிய அகவைத் துளிர் நாள் நல்வாழ்த்துகள்

தாயாய் நின்ற தமக்கைக்கு இனிய தாலாட்டு நாள் நல்வாழ்த்துகள்
பிரியமான அக்காவிற்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்




கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# பாரதியின் அதிர்வலைகள்



எட்டயபுரத்தின் எழிலரசன்
எண்ணங்களில் இருப்பவன்
கட்டுக்கடங்கா காளையவன்
கன்னித்தமிழின் பிள்ளையவன்

பாட்டுடைத் தலைவனவன்
பாரதத்தின் பகலவன்
பூட்டிக்கிடந்த பூவையர்கள்
பூட்டுடைத்த பூவரசன்

சட்டதிட்டங்களைத் தகர்த்தி
சாதிவெறி உடைத்தவன்
வெட்ட வெட்ட முளைத்த
வெண்மதியவன்

வாள்முனை தொடாது
வரிகளில் யுத்தமிட்டவன்
வேள்வி நாயகன்
வெற்றிகள் கண்டவன்

தேன்தமிழின் சுவையில்
தேவாமுது பருகியவன்
ஆண்பெண் சமத்துவத்தை
ஆற்றலோடு உரைத்தவன்

தீமைகள் தட்டிக்கேட்ட
தீயே பாரதீ
இமையாய் தழிழோடு
இன்பம் கொண்டாயே

அஞ்சா நெஞ்சத்தின்
ஆளுமை நீதானே
பஞ்சாய்ப் பற்றிடும்
பைந்தமிழ் பேச்சாளனே

அகிலம் வணங்கிடும்
அற்புதப் புலவனே
மகிமைகள் பேசிட
மனதார வாழ்த்துமே

கவிஞர் கிருஷ் அபி, இலங்கை

# நினைவலைகள்



இளமையில் நான்கண்ட விளைநிலங்கள் பலவும்
விலைபோயின பின்னாளில் வீட்டு மனைகளாக!
நீரின்றிக் கரம்பான நிலங்களில் இருக்கின்ற
புற்களை கால்நடைகள் மேய்ந்து பசியாறும்!
விளைந்தாலும் உரிய விலைபோகா நிலையாலே
கோலோச்சிய விவசாயி கோவணமும் கோலுமாய்!
மேய்ந்தபின் ஓய்வாய் அசைபோடும் கால்நடைபோல்
அந்நாள் நினைவுகளை அசைபோடுகிறேன் நானும்!



பட உதவி நன்றி: நம் உரத்த சிந்தனை

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி, புதுச்சேரி



ஒருபோதும் நான் மகிழ்ச்சியை தேடுபவனாக இருந்ததில்லை
என் எல்லா சமயங்களிலும் நான்
மகிழ்ச்சியை உருவாக்குபவனாகவே
இருந்திருக்கிறேன்.

கவிஞர் சி. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

முள் செடி கொடி ஆக்கிரமிப்பால் அடையாளமாறியிருக்கும் ஓர் ஓடையில் முதல் காட்டுமழைவெள்ளம். அழுக்கு நுரை, முந்திவரும் முட்கள், அழிந்துபோன செடி மரமுண்டுகள், மண்ணின் நிற மழைவெள்ளம், கூடும் இரைச்சல், ஆளையிழுக்கும் வேகம், சரிந்து விழும் ஓடைக்கரை,கூனியிருக்கும் நாணல்கள். இக்காட்சிகளைச் சுமந்து பயணிக்கும் காட்டாற்றை நாம் கடந்த நொடியே நெஞ்சத்திலிருந்து அவை ஆவியாகிவிடும்.

காட்டு மழையோந்த சில நாட்கள்.
இரச்சலை இறைத்த ஓடை. தெளிந்தோடும் நீரில் தெரியும் உருளும் கூழாங்கற்கள், நீந்தும் மீன்கள். மெல்ல மெல்ல நிமிரும் நாணல்கள், கரையோரச் செடி பூ முள்மரங்களின் பிரதிபலிப்பு. அதனுடன் கைகோர்க்கும் வானத்தின் பிரதிபலிப்பு. இந்தக்கண்கவர் ஓடையை கடந்த பிறகும் நம் மனதிற்குள் சலசலவென நீரிசைக்கும். சிந்தனையை மாற்றிச் சிந்தையை மென்மையாக்கும். மலரச்செய்து மனிதனை அழகாக்கும். இயற்கைக்காட்சியெப்படி இவ்வளவு ஆற்றலைக் கொண்டிருக்கிறதோ அப்படித்தான் அதைப் படிமாய்க்கொண்டு பாடப்படும் ஹைக்கூவிற்கும் அவ்வளவு ஆற்றல்.

முப்பொழுதும் கடக்கும் கவிதைகளில் இந்த மூன்று வரிகள் மட்டும் என்னவோ மனதில் இன்னும் மணக்கிறது. சிந்தையில் சூடேற்றும் சொற்களையும் வன்மத்தை வாந்தியெடுக்கும் வரிகளையும் பிறப்பிக்கும் கவிதை வகைமைகளிலிருந்து நிறைய வேறுபடும் ஹைக்கூ. வியக்க வைக்கும் காட்சிக் கருத்துச்செறிவு. இவற்றையெல்லாம் கவிஞர் ச.ப.சண்முகம் அவர்கள் சமீபத்திலெழுதிய ஒரு ஹைக்கூ சுமந்து நிற்கிறது.

கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

"நீர் நிரம்பிக் கிடக்கிறது
இனியாவது வெளியேறுங்களேன்
கிணற்றுத் தவளைகளே...!"



- கவிஞர் ச.ப.சண்முகம், எழுவாம்பாடி, திருவண்ணாமலை

ஜப்பானிய ஹைக்கூவில் தவளை ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது. நீர் நிரம்பியிருக்கும் வெளியுலகு புதிய வாய்ப்பெனும் படிமம். திறமைமிக்க ஆடவளோ ஆணோ புதிய வாய்ப்புப் பூக்கும் பொழுது அச்சமின்றி ஏற்றல் உயர்வாக்கும். சரியான வாய்ப்புக்குக் காத்திருக்கவேண்டும் அதே நேரத்தில் கிடைக்கும் நற்வாய்ப்புகளை நழுவ விடக்கூடாதென படிப்பிக்கும் வரிகள். சௌகரியமாகயிருக்கும் சிறு வட்டத்தைத் தாண்டிப் பயணிக்கும் பொழுது புதிய உலகத்தை நாமறிவதோடு மட்டுமல்லாமல் உலகவெளிச்சம் நம்மேல் படும் பொழுதும் நிகழும். சாவல்களைத் தாண்டிப் பயணிக்கும் பொழுதே வெற்றிக்கனிக் கிடப்பது நிச்சயம். எவராலும் எவரொருவரையும் எப்பொழுதும் கட்டுப்படுத்தயியலாது. அவ்வெண்ணமெல்லாம் நம் மனதின் மாயை மட்டுமே. தவளையென்று நம் மனதை தான் சொல்லாமல் சொல்லுகிறார் கவிஞர்.

வியக்க வைக்கும் ஆழெண்ணங்களை விதைத்துவிட்டுச் செல்லும் கவிஞர் ச.ப.சண்முகம் ஐயா அவர்களுக்கு இதயம் கனிந்த வாழ்த்தும் நன்றியும்.

கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

## நூல் அனுபவம் (சிறுகதைப் பூங்கா)

"சிறுகதைச் செம்மல்" இரஜகை நிலவன்




ஒரு நல்ல சிறுகதை என்பது ஒரு சுவைமிக்க மாம்பழத்தை இறுதிவரை விரும்பிச் சுவைப்பது போன்றதாகும். அவ்வாறு இன்றி, மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசியெறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால், அச்சிறுகதையினால் பயன் ஒன்றும் இல்லை என்பது தெரியவருகிறது.

ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி - இவையனைத்தும் இலக்கண வரம்புகளை விட முக்கியமானவை. வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, சூறாவளியின் சுழற்சியோ, நீர்க்குமிழியின் வட்டமோ, ஏதாவது ஒரு அணுவின் சலனமோ சிறுகதையாக இடமுண்டு.

"இரஜகை நிலவன்"ஒரு நல்ல கவிஞர் என்று அறிவேன், இன்பம் பயந்து இனிமை சொரிந்து துன்பம் விலக்கி தூய்மை வளர்த்து அன்பைப் பெருக்கி அளவிற்பெருகி இன்பமாய் எழுந்துள்ள.. இந்த* " அழகின் விடியல்'' புத்தகம் ஒரு சிறந்த படைப்பு.

தமிழ்மகள் வாசுகி, பத்திரிகையாளர், பெங்களூர்

# அப்பாவின் தோழர்கள்

## நூல் அனுபவம் (கவிதைத் தொகுப்பு)

நூலாசிரியர் : தோழன் ராசா
வெளியீடு: செம்மை வெளியீட்டகம் உடுமலை
முதல் பதிப்பு ஆகஸ்ட் 2024 ; பக்கம் 84; விலை ரூ 80
தொடர்புக்கு 9865905974

அன்னப்பால் என்ற சிறுகதைத் தொகுப்பின் மூலம் பரவலாக அறியப்பட்ட தோழன் ராசா அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இது.

கடவுளையும் மன்னனையும் போற்றிப் பரிசில் பெற்ற கவிகளின் காலம் இதுவல்ல. மண்ணையும் மக்களையும் அவர்தம் பாடுகளையும் பாடி விழிப்புணர்வூட்டும் சிவப்புச் சிந்தனைகள் நிரம்பிய இந்த நூலின் அட்டைப்படமே கவிஞர் எடுத்துக்கொண்ட பாடுபொருள்களை சிறப்பாக எடுத்துக்கூறிவிடுகிறது.

காலம் எவ்வளவோ கருவிகளை மனிதனுக்கு அறிவியலின் வழியே பரிசளித்தாலும் வர்க்கபேதங்களும் தீண்டாமைக் கொடுமைகளும் ஏற்றத்தாழ்வுகளும் இன்னும் இருக்கவே செய்கின்றன. பொருளாதார பேதங்கள் தீர்வதே மனிதர்களின் வாழ்வியலில் சமத்துவத்தை நிலைநிறுத்திட உதவி புரியும். ஆனால் அத்தகு ஏற்றத்தாழ்வுகளைக் களைய முற்படாமல் மக்களை இன்னும் வறுமைக்குள்ளேயே உலவவிடும் அரசுகளின் மீதான பாட்டாளிகளின் கோபமும் கவிதைகளென மலர்ந்து நெருப்புச்சுடரென ஒளிர்கின்றன.

குடிமக்கள் காப்பியம் எனப்படும் சிலப்பதிகாரத்தில் கடவுளை விட மனிதனுக்கும் இயற்கைக்கும் முக்கியத்துவமும் மரியாதையும் அளிக்கும் இளங்கோவடிகள் ஞாயிறு போற்றுதும் எனறே நூலினை ஆரம்பிப்பார். அதைப்போலவே மானுடத்தின்மீது அசையாத பற்றும் நம்பிக்கையும் கொண்டிருக்கும் தோழர் பேருக்கேற்பவே மானுடம் போற்றுதும் என்றே கவிதைகளை ஆரம்பிக்கிறார்.

கவிஞர் இளையவன் சிவா

# அப்பாவின் தோழர்கள்

## நூல் அனுபவம் (கவிதைத் தொகுப்பு)

தன்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட பக்கத்துவீட்டுப் பாட்டியை காலச்சூழல்கள் துறந்திட ஆண்டுகள் பல கடந்து சந்திக்கையில் அன்பை வெளிப்படுத்தத் துடிக்கும் மனம் பாட்டி கேட்கும் ஒற்றைக்கேள்வியால் சுக்குநூறாக நொறுங்கிப் போகிறது. பாசமிகு பாட்டியை பரதேசியென அலையவிட்ட சமூகத்தின் போக்கை யார் தட்டிக் கேட்பது? ஆதங்கத்தை வலியை,வேதனையை வரிகளின் வழியாகவாவது இறக்கிவைக்கத் துடிக்கிறது கவிமனம்.(பக்கம் 31 கவிதையல்ல...)




தமிழ் மீதான பற்றும் பாசமும் பல கவிதைகளில் வெளிப்படுத்தும் கவிஞர் மணல் கொள்ளை லஞ்சம் வாக்குக்கு வழங்கும் இலவசங்கள் என சமூகத்தின் புரையோடிப்போன சாக்கடைத்தனங்களை சாடும்போது ரௌத்ரம் கொள்கிறார். உலகம் உருண்டைதானே .எங்கோ ஒருவருக்கு நிகழும் ஏதோ ஒன்று கடைசியில் அவரிடமே வந்து முடிந்துவிடும். நியூட்டன் மூன்றாம் விதிகூட இதைத்தானே சொல்கிறது. பக்கம் 6ல் உள்ள எல்லை வட்டம் கவிதையும் அதையே சமூகத்திற்குச் சொல்லி விடுகிறது.

"கூலிகளிடம்
அளவோடு வைத்துக் கொள்
மேஸ்திரி கடிக்கப்பட்டார்
மேஸ்திரியிடம்
அளவோடு வைத்துக் கொள்
சூப்பர்வைசர் பணிக்கப்பட்டார் சூப்பர்வைசர்களிடம்
அளவோடு வைத்துக் கொள்ள
மேனேஜர் கேட்டுக் கொள்ளப்பட்டார் முதலாளியோடு
அளவோடு வைத்துக்கொள்ள
கூலிகள் முடிவெடுத்தனர்"

கவிஞர் இளையவன் சிவா

# அப்பாவின் தோழர்கள்

## நூல் அனுபவம் (கவிதைத் தொகுப்பு)

மீறல் நியதி, தட்டி மகிமை, உடனடித் தேவை ,அப்பாவின் தோழர்கள் ஆகிய கவிதைகள் மக்களுக்குள் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் விரித்துரைக்கும் அதே வேளையில் எங்கெல்லாம் தவறுகள் நடக்கிறதோ அங்கெல்லாம் தட்டிக் கேட்பதற்கான திறனை வளர்த்துக் கொள்ளவும் முன் நின்று போராடுவதற்கான உரிமையை அறிந்து கொள்ளவும் மக்களை தயார்படுத்துகின்றன.

கீரைக்காரியிடம் பேரம் பேசுவதும் துணிக்கடைக்குள் பல ஆயிரம் பணத்தை எவ்வித சலனமும் இல்லாமல் கொடுத்து விட்டு வருவதும் என இரட்டை வேடம் போடும் மனிதர்களை எள்ளி நகையாடுகிறது பக்கம் 12ல் உள்ள இக்கவிதை படம் பிடித்துவிடுகிறது.

உயிரினங்கள் அதனதன் வேலையை அவையவை செய்கின்றன.பிறருடைய வேலையைக் குலைப்பதோ தடுப்பதோ நடக்கவடாமல் செயல்களைச் செய்வதோ விலஙகுகளிடத்தில் இருப்பதில்லை. ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமே தனக்குத் கிடைத்திட்ட ஆறாவது அறிவு என்ற சிறப்பைப் பயன்படுத்தி பிறருடைய செயல்களுக்குள் தன்னைப் புகுத்தி விடுகிறான்.அவனைவிட விஷமுள்ள மிருகம் எதுவுமில்லை என்பதையே "விஷம் அதிகமுள்ள பாம்பு" கவிதை வெளிப்படுத்துகிறது.

தீட்டி இருக்கிறார்கள்
கோவில் குளம்
படிக்கட்டுகள்
தென்னை
மாலைச் சூரியன்
மேகக்கூட்டம்
பறவை கூட்டம்
இன்னும் இன்னும்
இருந்தும்
உண்மையைச் சொல்லவில்லை ஓவியம் பிச்சைக்காரர்கள் எங்கே?




கவிஞர் இளையவன் சிவா

"மறைப்பதெதற்கு" என்ற தலைப்பிலான இந்தக் கவிதை இன்றைய கோவில் குளங்களை மட்டுமல்ல நிறைய பொது இடங்களில் தெரியும் பிச்சைக்காரர்களைப் பற்றிய பிம்பத்தை மட்டும் கூறவில்லை.

பணத்தை நோக்கி ஒடும் குடும்பங்கள் அதிகரித்துவிட்ட நிலையிலும் கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு சிதைந்து தனிக் குடும்பங்களாக மாறிவிட்ட அவல நிலையிலும் பெற்றோர்களே பிள்ளைகளை கவனித்துக் கொள்வதற்கான நேரம் இல்லாத நெருக்கடியிலும் இன்று, நாளைய தலைமுறை என வளரும் குழந்தைகள் உறவுகளை எப்படி அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் நாள் முழுவதும் அவர்கள் யாரையெல்லாம் சந்தித்து தங்களை இளைப்பாற்றிக் கொள்ள முடிகிறது என்பதையும் வளரும் பருவத்தில் அவர்களின் மனங்களுக்குள் பாசம் நேசம் அன்பு போன்றவற்றை பள்ளிக்கூடங்கள் விதைக்கின்றனவா என்பதையும் கேள்வி கேட்கிறது பக்கம் 32 இல் உள்ள "தெய்வமுமாய்" கவிதை.

"கதை சொல்லியபடியே
சோறு ஊட்டும் பாட்டிகள்
நிலவைக் காட்டி
அமுதபடிக்கும் அம்மாக்கள்
விளையாடிக் கொண்டே
உணவு கொடுக்கும் அப்பாக்கள் கனவுகளில்
களிப்பூட்டும் தேவதைகள்
எல்லாமாகத் தெரிகிறார்கள் குழந்தைகளுக்கு
அனாதை இல்ல ஆயா

ஆணவப் படுகொலைகளை தூண்டிவிடும் சாதி வன்முறையும் தீண்டாமைக் கொடுமைகளும் அதிகரித்து வரும் இன்றைய சூழலில் கலப்புத் திருமணம் செய்த உள்ளங்கள் சிறப்போடு வாழ்வதற்கும் வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கும் வழிகள் தென்படுவதில்லை.

## நூல் அனுபவம் (கவிதைத் தொகுப்பு)

"ஏன் இவளே
அறிவு இருக்கா உனக்கு
மையூத்தி வைக்கிறது
இல்லையா பேனாவுல"

என ஆதிக்கத்தை வெளிக்காட்டிவிடுகிறது ஆண் மனம்.

இத்தொகுப்பில் பல பாடல்கள் இசைக்கட்டுகளுக்குள் எழுதப்பட்டுள்ளன. மரபுக் கவிதைகளைப் போலவும் சந்த நயங்களுடனும் எதுகை மோனைகளுடனும் எழுதப்பட்டு இருக்கும் கவிதைகளின் பாடு பொருட்கள் நம் அன்றாட வாழ்வின் சித்திரங்களாகவே காணக் கிடைக்கின்றன.

இன்றைய வாழ்க்கை பற்றிய நிஜத்தை கவிதையாய் வடிக்கும் மக்கள் கலைஞனின் பார்வை வறுமை நிலையில் இருக்கும் மக்களின் மீது தான் நிலை கொள்கிறது. தன் குடும்பம் தன் நிலை என்ற தனக்குள்ளேயே வாழும் மனித வாழ்க்கையில் இருந்து வேறுபட்டு சமூகத்தை முன்னெடுக்கும் கவிதைகளால் இந்த அப்பாவின் தோழர்கள் அனைவருக்கும் நெருக்கமான தோழராக மாறிவிடுகிறது




கவிஞர் இளையவன் சிவா

## பிறப்பின் பொருள்

எட்டயபுரத்தில் பிறந்து - கவிஞனாய் வளர்ந்து மானுடத்தை மாற்றும் பணியில் தன்கவிதையால் களம்காண டிசம்பர் 11, 1882ல் பிறந்தவன் பாரதி. யார்கவிஞன்? எதுகவிதை?என்று எடைபார்ப்பவா்க்கு சத்தியதராசாய் தரணியில் பிறந்தான்.

"எட்டையபுரத்தில் ரெட்டைபிரசவம். நீயும், புதிய தமிழும்" - கவிக்கோ

## உன் கவிதையே உன் வாழ்க்கை



தந்தையாரின் விருப்பப்படி கணிதம் படித்து பொறியியல் முடித்து தொழிலதிபராக வாழ்ந்திருக்கலாம். 11 வயது எட்டையபுர சமஸ்தானத்தில் கூளப்பநாயக்கர் காதல்/ விறகுவிடுதூது என்று ஜமீன்தாரின் தினவுகளை தடவிக்கொடுத்து செல்வத்தில் செம்மையாய் வாழ்ந்திருக்கலாம். ஆனால் வறுமையை பெருமையாய் விரும்பி ஏற்றுக்கொண்டு எழுத்தினாலேயே வேள்வி நடத்தினான்.

"உன் கவிதையைவிட அழகிய கவிதை உன் வாழ்க்கை.
உன் வாழ்க்கைதான் உன் கவிதையின் வார்த்தை நிழல்கள்"- கவிக்கோ.

## நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா:

நல்லக்கவிதை என்பது ஏடெடுத்து படிப்பவா்க்கு புரியக்கூடாது என்ற தத்துவத்தில் பரம்பொருள்/சிற்றின்பம் என எழுதி வந்தபழங்கவிஞா்கள் மத்தியில் தமிழை எளிமையாக்கி சாதாரண மனிதா்களை பற்றி பாடினான் / சாதாரண மனிதா்களுக்காக பாடினான் / சாதாரண மனிதா்களை மேம்படுத்த பாடினான்.

தன் பாட்டில் தாலாட்டு பாடாத கவிஞன் பாரதி

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# கட்டுரை

### கவிதை பாரதிக்கு முன்/பின் (பா.மு/ பா.பி):

பாரதிக்கு முன்னால் கையாளப்பட்ட அதே உருவகம் / உவமைகள் /அணிநயங்களை பயன்படுத்தியே பழையபாட்டையில் புதிய பாதையை போட்டான். தன்னைப்பற்றி நினைக்கும் கவிஞா் மத்தியில் இம்மண்ணைப் பற்றியும் / மக்களைப்பற்றியும் நினைத்த கவிஞன் பாரதி.

"கவிதை நிலாமுற்ற விளையாட்டில் நோ்முக வா்ணனையாய் நிலவியபோது அதை பாமர மக்களின் பசிவிண்ணப்பத்திற்கு பயன்படுத்திய முதல்கவிஞன் பாரதி"- வைரமுத்து

### யாமறிந்த மொழிகளிலே:

தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், பிரெஞ்சு, தெலுங்கு ஆகிய மொழிகள் தெரியும் போலீஸ் விசாரணையின் போது "நீங்கள் லண்டனில் படித்தவரா? உச்சரிப்பு இவ்வளவு துல்லியமாக இருக்கிறதே?" என்று ஆச்சர்யப்பட்டாராம் அதிகாரி. பலமொழி தெரிந்த பாரதி கூறினான்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்"

### ஐய்யனின் ஐந்து கனவு:

பாரதியாரை ஐய்யன் என்றே அழைப்பாராம் பாரதிதாசன்.

1. இந்திய மண்ணின் விடுதலை

வந்தேமாதரம் என்போம் ', 'எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி இருந்ததும் இந்நாடே ', 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று, ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு ', '
ஜயஜய பாரதம்

கட்டுரை

**ஐய்யனின் ஐந்து கனவு:**

2. சாதி பேதங்களிலிருந்து வேற்றுமையிலிருந்து விடுதலை

"சாதிகள் இல்லையடி பாப்பா; குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;"

3. மதங்களின் வேற்றுமையிலிருந்து விடுதலை

"ஒன்று பரம்பொருள் நாம் அதன்மக்கள் உலகு இன்பக்கேணி" .
வந்தே மாதரம் என்போம் பாடலில் "ஜாதி மதங்களை பாரோம்".

4. ஆணாதிக்கத்திலிருந்து பெண்களுக்கு விடுதலை

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்"

5. சமத்துவ சகோரத்துவ சமுதாயம்.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுஉடைமை ;
ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை.
எல்லோரும் அமரநிலை யெய்து நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும்
இங்கு (மனித ருணவை மனிதர் பறிக்கும் வழக்கமினி யுண்டோ ?)

எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர்இனம் எல்லோரும் இந்தியா மக்கள்
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

இறப்பின்றி இறந்தான்:

காலா! உனைநான் சிறுபுல்லென மதிக்கிறேன்; என்தன் காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்- பாரதி

1921 ஆம் ஆண்டு ஜூலைமாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு சென்றபோது, எதிர்பாராவிதமாக அந்த கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார்.



"ஆப்கன் மன்னன் அமரனுல்லாகானைப் பத்தி நாளை காலையில எழுதி எடுத்துட்டுப் போகணும்" என்று சொல்லிவிட்டுப் படுத்தார் 1921 செப்டம்பர் 11ம்தேதி, தனது 39ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார். தூக்கத்தில் உயிர் பிரிந்தது. அவரது உடல் புதைக்கப்பட்ட இடம், சென்னை கிருஷ்ணாம்பேட்டைச் சுடுகாடு. அன்றைய தினம் இருந்தவர்கள் 20 —க்கும் குறைவானவர்களே.

பார்மீது நான் சாகாதிருப்பேன் - பாரதி

இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்

| | |
|---|---|
| பெயர் | மகாகவி பாரதியார்<br>*(எட்டப்பநாயக்கர் மன்னர் இவருடைய கவித்திறனை மெச்சி, கலைமகள் எனப்பொருள்படும் பாரதி என்ற பட்டம் வழங்கினார்)* |
| பெயர் | சுப்பையா (எ) சுப்பிரமணியன் |
| பிறப்பு | டிசம்பர் 11, 1882 பிறந்த இடம் எட்டயபுரம், தமிழ்நாடு |
| இருப்பிடம் | திருவல்லிக்கேணி, சென்னை |
| பெற்றோர் | சின்னசாமி ஐயர் - இலக்குமிஅம்மாள் |
| துணைவியார்பெயர் | செல்லம்மாள் |
| பிள்ளைகள் | தங்கம்மாள், சகுந்தலா |
| பணி | கவிஞர், எழுத்தாளர், விடுதலைபோராட்ட வீரர், பத்திரிக்கை யாசிரியர் |
| பாரதியின் குருக்கள் | 1. பத்திரிகைகுரு - 'திஇந்து' ஜிசுப்பிரமணிய ஐயர்,<br>2. அரசியல்ஆசான் -திலகர்,<br>3. ஆன்மிகவழிகாட்டி- நிவேதிதாதேவி! |
| பணியாற்றிய | சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, விஜயா, சூரியோதயம், கர்மயோகி, தர்மம் ஆகிய தமிழ்ப்பத்திரிகைகளிலும் பாலபாரதா என்ற ஆங்கில இதழிலும் தொடர்ந்து பணியாற்றியவர். |
| முக்கிய படைப்புகள் | கண்ணன்பாட்டு, குயில்பாட்டு. பாஞ்சாலி சபதம், புதியஆத்திச்சூடி மற்றும் பலசமயம் இந்து. 66-தோத்திரப் பாடல்கள்<br>30- வேதாந்தப் பாடல்கள்; 53 - நாட்டுப் பாடல்கள் |
| மற்றபெயர்கள் | மகாகவி, முறுக்கு மீசைக்காரன், முண்டாசுக் கவி. பாட்டுக்கொரு புலவன், சிந்துக்குத் தந்தை |
| முதல்பாடல் | தனிமையிரக்கம் தலைப்பில் காதல்பாடல் |
| கடைசிப்பாடல் | பாரத சமுதாயம் வாழ்கவே |
| இறப்பு | செப்டம்பர் 11, 1921 |

நாளை

# நமதே

விழும் வேகத்தைவிட

எழும் வேகம்

அதிகமாய் இருந்தால்

தோற்கடிக்க அல்ல

உன்னை பார்க்கவே

உன் எதிரி பயப்படுவான்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com